THE CURSE OF THE MOTHER

A SOCIOLOGICAL DRAMA IN TAMIL

"AUNDY"

ஸ்த்ரீ ஸம்ரக்ஷண ஸபா.

பெயர்.

இச்சென்னை மாகாணத்திலுள்ள அனாதைகளான ஸ்த்ரீகளின் பாதுகாப்புக்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு அரசியல் வாதத்தி லீடுபடாத ஒரு தரும ஸ்தாபனமாகும் இந்த "ஸ்த்ரீ ஸம்ரக்ஷண ஸபா" என்பது.

கொள்கைகள்.

(a) வறுமையாலே, புருஷர், தாய் தந்தையருடைய ஆதரவின்மையாலோ அல்லது அவர்களுடைய மரணத்தாலோ பரிதபித்துக்கொண்டிருக்கும் ஸ்த்ரீகளுக்குக் கௌரமான புகலிடமோ ஆசிரமமோ ஏற்பாடுசெய்து கொடுப்பது.

(b) மேற்கூறிய காரணங்களினால் பரிதபித்துக் கொண்டிருக்கும் மாதர்களுக்குச் சட்டப்படிக்குள்ள உரிமைகளைப் பெறுவதற்குத் தேவையான பொருளுதவியும் சட்ட நிபுணர்களுதவியும் ஏற்பாடு செய்வது.

(c) ஸகாயமற்ற வேலையில்லாத மங்கையர்களுக்கு வேலை ஏற்பாடுசெய்வது

(d) வீட்டுக்கு வீடு பிரசாரகர்களை அனுப்பி மாதர்களுக்கு, கர்ப்பம், பிரசவம், உணவு சம்பந்தமான ஆரோக்கிய சாஸ்திர உபதேசங்களும் வைத்திய உதவியும் ஏற்பாடு செய்வது.

(e) மாதர்களுக்கு சாமுதாயிகமாகவும், விவாக சம்பந்தமாகவும், சொத்து சம்பந்தமாகவுமுள்ள உரிமைகளைப்பற்றிப்பிரசாரம் செய்வதற்காக மகாநாடுகளையும், உபந்யாசங்களையும், நாடகங்களையும், ஆகோஷங்களையும் ஏற்பாடு செய்வது.

(f) மைலாப்பூர் ஔவையார் மந்திரம், கீழ்ப்பாக்கம் அனாதரக்ஷாலயம், நுங்கம்பாக்கம் சேவாசாதனம், மைலாப்பூர் சாரதா வித்யாலயம் முதலியவைபோன்ற வனிதாரக்ஷா மந்திரங்களைப் பலப்படுத்துவதற்கு வேண்டிய பொருள் உதவிக்கும் பொதுஜன ஆதரவுக்கும் பிரசார வேலை செய்வது.

இச்சங்கத்தில் ஜாதி மதவேற்றுமையின்றி மைனரல்லாத எல்லா மாதர்களும் அங்கத்தினராகச் சேரலாம். ஆனால் வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் சந்தாவை முன்னதாகவோ, நாலு தடவைகளாகவோ செலுத்தவேண்டும்.

உதவி போர்டார்.

இதுவுமன்றி ஜாதி மத வித்யாசமற்ற புருஷர்களுமடங்கிய ஓர் உதவிபோர்டாரும் இச்சங்கத்திலுளார். அவர்கள் வருஷத்துக்கு மூன்றுரூபாய் சந்தாகொடுத்து மூன்று வருடங்களுக்கொருதடவை அங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் அங்கத்தினரைப் போன்ற வோட்டு முதலிய எல்லா உரிமைகளும் பெறுவர். இந்த போர்டாருக் கிடையில் தனிப்பட்ட ஒரு தலைவரும், ஆறுக்கதிகப்படாத உபதலைவர்களும், ஒரு காரியதரிசியும் இரண்டு சட்ட நிபுணர்களும் உளர்.

பொதுக்கூட்டங்கள்.

ஒரு வருஷத்தில் வருஷாந்தர விருந்துக் கச்சேரி உள்பட நாலுக்குக் குறையாத பொதுக்கூட்டங்கள் கூட்டப்படும்.

கூடுமிடம்.

இச்சங்கத்துக்குத் தனிப்பட்ட ஒரு இடம் அமைவது வரையிலும் அதன் கூட்டங்கள் நிர்வாகக் காரியதரிசி ஏற்பாடு செய்யக்கூடிய இடங்களில் அவர்களால் குறிப்பிடப்பட்ட சமயத்தில் நடைபெறும்.

AUNDY'S PLAYS & WRITINGS.

SOME OPINIONS

"Your great playwright of whom any country may be proud"—[Harindranath Chattopadhyaya in a Public Lecture at Trivandrum]

"I thanked " Aundy " because he conceived the idea of the Art Festival, invited the guests on his own responsibility, framed the draft programme, and finally he created the organisation of the Art Festival Committee. I was too much behind the scenes not to know all this and Aundy's work was all behind the scenes. As a member of the Committee I felt grateful to a disinterested lover of art for his ideas, his enthusiasm and his unceasing labours and I felt called upon to thank him in the name of a Committee which owed so much to him. He can claim to stand in a special relation to the Committee and his claim will, in my opinion, be justified."—[Professor, C. V. Chandrasekharan, M.A. (Oxon), D. P. I., in "Trivandrum Express" 15/12/1927].

"I have read the work of Mr. Aundy with great interest"—[Sir P. S. Sivaswami Iyer in a letter to the Secretary of the Travancore Youth Conference].

"Far south in Trivandrum, in the Travancore State, there is a very active dramatic association, whose animating spirit is another young Indian, Mr. V. Ramasubramoniam, [" Aundy "], whose heart and soul are in the work of creating a true Indian Drama."—Dr. Handy, M.A., Ph.D., Superintendent of the Bishop Museum, Hawaii, and Delegate of the Institute of Pacific Relations to the World Science Congress (1927), in a special article in "Pacific Affairs" (April, 1930), Honolulu.

"Others dont matter to me except on the surface called earthly friendship. You [Aundy] come under the category of the complex and intangible in my growth and in my existence and together with you there are but a handful in the whole universe."—Harindranth Chattopadhyaya.

"He is a budding genius and we may well be proud of him. The Drama is his field and the plays he has so far given us are well read and appreciated for their originality, vigour of thought, the boldness of their conception, their suggestiveness and practical bearing." [*The Critic*]

"The author deserves to be congratulated on his bold attempt, after the model of Shaw & Ibsen, in taking up, as the subject-matter for the drama, some social problems which are of living importance, rather than go, as our authors very often do, to ancient myths and legends............We hope this promising attempt would be followed by other equally vigorous studies and criticisms by the talented author..." Prof. S. K. Yegnanarayana Iyer, M.A. in "The Hindu."

"I feel there is not much use discussing the possibilities and probabilities of a National Theatre. A great deal of groundwork must be done first, and I am convinced that plays such as you have been staging are the one means."—Mrs. E. G. Hatch, M. A. of America.

"I have been reading your spicy articles to "Tamil Nadu" and found them really interesting"—Dr. P. Varadarajulu Naidu.

"I enjoyed the book ("Mangalyam") immensely. Some of my friends to whom I showed it were very enthusiastic about its merits and wished to get copies for themselves.........It is a type of play which I have been dreaming about for a long time, and I never hoped to see it materialise so soon."—Mr. R. Sivaramakrishnan M.A. (Cantab.), LL.B. (Lond.) I.C.S.

"I am delighted to hear of your plans for a workshop (dramatic) and shall tell Prof. Baker (Harvard University Drama Department) of you when I see him." W. C. Handy, Ph.B. of New York.

"I chanced on a copy of Aundy's Drama "Mangalyam or Think about it" which I read with considerable pleasure. As one connected with amateur theatricals I have always felt the need for social plays which have for their object the bringing home to people's minds the existence of many unsatisfactory features in our ways of thinking and living. Aundy's play "Mangalyam" has the same object."—[Rao Bahadur M. G. Subramaniam of Calcutta.]

"He has merit, intelligence and a burst of something which, if it is not genius, is described by no other word. The spectator and the reader feels touched by the influence of the author's genius, and collects emotions in silence as he watches its development to swell its triumph with fresh acclamations. A piece like this ["The Curse of the Mother"] is worth a thousand homilies against horrid social practices. There are in it such a frightful reality of horror, such terrible revelations of remorse, and successful struggles to wash away the blood not only from the hands but also out of the very souls."—The late Prof. N. Krishnaswamy Iyer of Trivandrum in "*The Critic*."

"I have the greatest respect for him [Aundy]"—Mr. B. Subbarayalu Naidu of the Sadguna Sabha, Tinnevelly.

"I hope the public will make good use of them all [Aundy's plays]"—Mr. T. K. Chidambaranatha Mudaliar, Ex-Commissioner, Hindu Religious Endowment Board.

"Your drama "Mangalyam" was staged last Sunday (21–9–30) at the Calcutta University Institute by the Madras United Club. It lasted 3 hours. My congratulations to you on its brilliant success.........I felt proud to say to the conductor, Mr. Pattabhiramier, that you were my friend and villager and he asked me to be introduced to you. I do so with pleasure"—[Letter to Aundy by a spectator].

"Your idea of the Experimental Theatre is the only true basis for any constructive work for the regeneration of the Theatre. You write plays on the newer models of European Drama. Ibsen is indeed a model for any writer in any part of the world to copy."—[Sy. Kamaladevi Chattopadhyaya.]

"A dramatist of great promise and an actor of repute, he (Aundy) combines creative and constructive powers of a high order, with a wide knowledge of the movements and tendencies of Contemporary European Drama."—[Prof. C. V. Chandrasekharan, M.A. (Oxon)., D. P. I., Travancore State, in his "Foreword" to Aundy's play "Mangalyam."]

"It has to be admitted that the labours of Mr. Aundy is beginning to bear fruit by bringing a change in our theatre and in its outlook, thereby making it a source of cultural enjoyment to the people. .... We hope that Mr. Aundy will give us, ere long, works that will occupy a permanent niche of fame in the Tamil world of letters."—["Trivandrum Daily News."]

"இத்தகைய நாடக காவ்யங்கள் நம் தமிழ் நாட்டுக்குப் பல வேண்டும்...பொது மக்களுள் தனிப்பட்டுத் தலைவர்கள் செய்து வரும் தொண்டை நாடகமூலம் சுலபமாய் செய்யக்கூடும் என்பதற்கு "மாங்கல்யம்" சாக்ஷியாகும்...நாடகப்போக்கு முற்றும் ஒரு உயர்ந்த கொள்கையை அடிப்படையாகக்கொண்டு எழுதியிருப்பது போற்றத்தக்கதாயினும் குறுகிய நோக்கத்தவருக்கு சிறிது மன மாறுபாட்டையும் யோசனையையும் தூண்டும்."—["தமிழ் நாடு"]

"ஸ்த்ரீ தர்ம"ாவில் இருந்து எடுக்கப்பட்டது: [மலர் 19, இதழ் 2, '36.]

ஆசிரியர் "ஆண்டி"

ஒரு ஸ்திரீ சுதந்திரவாதி

[நாடகப்ப்ரியை]

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமிருந்து உற்பத்தியாகும் டாக்கிகளையும் நாடகங்களையும் பார்த்தும் படித்தும் ஆனந்திப்பவள் நான். சென்னையில் வரும் ஒரு இங்கிலீஷ் பிலிமையும் நான் தவறவிடுவதில்லை. பெண்களுடைய சம உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் ஆதரவாக யார் யார் நூல்களை இயற்றியிருக்கிறார்களென்று ஆராய்ச்சி செய்ததில் ஐரோப்பிய நாடகாசிரியர்களே முதன்மை ஸ்தானம் வகிக்கிறார்களென்றறிந்ததினால் அந்நாடுகளில் வழங்கிவரும் டாக்கிகளையும் நாடகங்களையும் படிக்கலானேன். நாளிதுவரையிலும் நோபல் பரிசுபெற்ற சுமார் 35 ஆசிரியர்களில் 15 பேர்களுக்குமேல் நாடகாசிரியர்கள் என்றால் உலகில் மற்ற நாடுகளில் நாடகம் எவ்வளவு சிறப்பையும் உயரிய கொள்கைகளையும் உடைத்தாயிருக்கிறது என்று தெரியவில்லையா? தேசமொன்றுக்கு ஆயிரக்கணக்கான சாமுதாயிக நாடகாசிரியர்கள் வீதம் அங்கு தோன்றியுள்ளார்கள். தத்தம் நாடுகளுக்கு இவர்களே புத்துயிர் அளித்தவர்கள். இவர்களிடமிருந்தே அவ்வத்தேசத்துப் பெண்களும் ஆண்களும் சுதந்திர தாகத்தை அடைந்துள்ளார்கள். ஆனால் நமது தமிழ் நாட்டிலோ?

* * *

பாழும் புராணங்களைவிட்டு நமது சமகால வாழ்க்கையைப்பற்றி எழுதப்படும் நாடக சினிமாக் கதைகளே தமிழ் நாட்டில் சொற்பம். அதிலும் நமது சமுதாயத்தின் ஊழல்களையும், மாசு படிந்தும் அழுகியும் கிடக்கும் சிற்சில பழக்கவழக்கங்களையும் தைரியத்துடன் கண்டனம் செய்யத்துணியும் ஆசிரியர்கள் மிகவும் துர்லபம். அப்படியிருக்க வருங்கால வாழ்க்கைகளையும் அதற்கு வேண்டியமன ஊக்கங்களையும் முயற்சிகளையும் பற்றி எழுதத்துணியும் ஒரு ஆசிரியனாவது தோன்றுவானாயின் அது ஒரு ஆச்சரிய மல்லவா?—அத்தகைய ஆச்சரியமே நான் ஈண்டு குறிப்பிடப் போகும் ஸ்ரீ "ஆண்டி" என்ற புனைப் பெயருடைய உயரிய நாடகாசிரியர்.

* * *

ஸ்ரீ "ஆண்டி" யைப்பற்றித் தமிழுலகில் சிலருக்கு இதற்கு முன்பே தெரிந்திருக்கலாம். 1917-முதல் நாளிது வரையிலும் "தமிழ் நாடு", "குமரன்", "ஊழியன்", "பாரதி", "லக்ஷ்மீ", "வஞ்சிகேசரீ" முதலிய தமிழ்ப் பத்திரிகைகள் மூலமாகவும் "ஸ்வராஜ்யா", "சுதரிசனம்", "க்ரிட்டிக்", "சிறுகதை", "திருவனந்தபுரம் டெய்லீ ந்யூஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகள் மூலமாகவும் தமது நாடகங்களையும்

நாடக ஆராய்ச்சிகளையும் வெளியிட்டு வந்திருக்கிறார். சுமார் இருபது நாடகங்கள் வரையிலும் எழுதியிருப்பினும் அவை பொது ஜனங்களுக்கும் பாமரர்களுக்கும் எட்டாப் பொருளாயிருக்கின்றன. அவைகளிற் சில திருவாங்கூரிலும் ஒன்றிரண்டு கல்கத்தா முதலான நகரங்களிலும் நடிக்கப்பட்டுள. ஆனால் பெரும்பாலான நமது தமிழ் நாட்டினருக்கு "ஆண்டி"யின் நாடகங்களும் நாடக முறைகளும் இன்னும் புதுமையாகவே இருக்கும் என்று திட்டமாய்ச் சொல்லுவேன். ஆகையாற்றான் நான் அவரைப்பற்றி இங்கு குறிப்பிட முற்பட்டிருக்கிறேன்.

* * *

"ஆண்டி" ஓர் ஸ்த்ரீ சுதந்திரவாதி. ஸ்த்ரீகளுக்கும் ஆண்களைப்போன்ற சொத்துரிமையும், சந்தான உரிமையும், வோட்டுரிமையும், உத்தியோக உரிமையும், விவாக உரிமையும் வேண்டுமென்பவர். அவர்களுக்கும் மடாதிபதி ஸ்தானம் ஏன் அளிக்கக்கூடாது என்று கேட்பவர். "பலதார மணம்" என்ற அநீதியை ஒழிக்கவென்று ஒரு இயக்கத்தை ஆரம்பித்து, ஊரூராகச்சென்று உபந்யாசங்கள் செய்து தமது நாடகங்களைத்தாமே நின்று அபிநயித்து, மகத்தான கிளர்ச்சியைச் செய்தவர்.

* * *

ஸ்த்ரீகளேதான் ஸ்த்ரீவேஷம் தரிக்கவேண்டுமென்றும், சங்கீதத்துக்கு சம்பாஷணையைப்போன்ற சமத்துவம் கொடுக்கக்கூடாதென்றும், சித்திரப்படுதாக்களை அகற்றி விலை குறைந்த கடிதாசிகளைக்கொண்டே சீன் தயாரிக்கப்படவேண்டுமென்றும், பின்பாட்டு ஆர்மோனியம் இவைகளை அறவே ஒழிக்க வேண்டுமென்றும், மின்சார விளக்குகளையும் வெளிச்சங்களையும் கூட இடமறிந்து செட்டாக உபயோகப்படுத்த வேண்டுமென்றும், வேண்டிவந்தால் இருட்டிலேயே கூடநாடகம் நடிக்கப்படவேண்டுமென்றும் கொள்கைகளையுடையவர். அவ்விதமே பலதடவை நாடகங்களை நடித்துச்சபையோர்களைப் பிரமிக்கச் செய்திருக்கிறார்.

* * *

"ஆண்டி" யுடைய நாடகங்களில் சம்பாஷணைகளே சிறந்தவை. வெட்டும், குத்தும், விஷமும், யுத்தமும், காதலும், காமமும், கொண்டு நிறைந்திருக்கும் நமது தற்கால சினிமா டாக்கீகளைப்போலல்ல. சில நாடகங்களில் கதை பாகமே கிடையாது என்பேன். ஆனால் ஆரம்பம் முதல் முடிவு வரையிலும் என்ன சம்பவிக்கப்போகிறதென்று ஆவலுடன் கவனித்து எதிர்பார்த்தபடியே இருப்பார்கள் வாசகர்களும் சபையோர்களும். "மங்கல்யம்" என்ற நாடகத்தைத் திருவாங்கூர் நாடக ஆராய்ச்சி மேடை அதிகாரிகள் பிரசுரித்து 1927-ல் நடித்தார்கள். அதில், கமலா என்ற கல்வியுடைய பெண் அபஸ்மாரமும் பைத்தியமுமுடைய பணக்கார வாலிபனொருவனுக்கு மணம் செய்விக்கப்பட்ட தாயில்லாப்பெண். அவளுடைய தகப்பன் இளையாளை விவாகம் செய்துகொண்டதுபற்றி அவளுடைய மாமனார் அவளைப் பிறந்தகத்திற்கனுப்பிவிட்டுத் தன் மகனுக்கு மறுமணம் செய்ய யத்தனிக்கிறான். கமலாவின் தகப்பன் அப்பொழுது தற்செயலாக அங்கு எழுந்தருளியிருந்த தனது மதகுருவிடம் இதை முறையிடுகிறான். அந்த மதகுரு இவ்விஷயத்தில் தலையிடவியலாதென்று கையை விரிக்கிறார். அங்கு குழுமியிருந்த வக்கீல்களும், ஜட்ஜிகளும், மாஜிஸ்ட்ரேட்டுகளும்கூட அவ்விதமே சொல்லிவிடுகிறார்கள். சில நண்பர்கள் கமலாவையும் அவள் தந்தையையும் அழைத்துக்கொண்டு அவள் மாமனாரிடம் சென்று மிகுந்த பணத்தைக்கொடுப்பதாக வாக்குறுதி செய்ததும் அவர் அதற்கிணங்கி கமலாவை ஏற்றுக்கொள்ள இசைகிறார். ஆனால் அவரது புதல்வனுடைய அபஸ்மாரமும் மௌட்டியமும் அப்பொழுதுதான் பிறர் எல்லோருக்கும் பிரத்தியக்ஷமாக விளங்குகிறது. இத்தகைய

கணவனுடனா தன்னை வாழச் சொல்லுகிறீர்களென்று கமலா கண்ணீருடன் அவர்களிடம் கேட்கிறாள். யாவரும் பதில்கூறவியலாது திகைத்து நிற்கின்றனர். உடனே அங்கிருந்த வாலிபனொருவன் மாத்திரம் முன் வந்து தன்னை மறுமணம் செய்து கொள்ளும்படிக் கேட்கிறான். அவள் அதைத்திரஸ்கரித்துவிட்டு, இந்து விவாக மென்ற விலங்குக்கு அறிகுறியான தன் திருமங்கல்யமடங்கியதாலியை அறுத்து அவர்கள் கால்களில் வீசி எறிந்து விட்டுச் சரேலென்று வெளியேறுகிறாள்.

இந்தக் கதையை நடித்ததும் பெரியதோர் வாதப்பிரதிவாதம் ஆரம்பித்தது. சுமார் மூன்று மாதங்களுக்குத் தினசரிப் பத்திரிகைகளில் இதுவேதான் விஷயமாயிருந்தது. “இந்துவனிதா சங்கம்” என்ற மாதர் சங்கம் இதனை ஆதரித்தும், புருஷர்களில் பெரும்பாலோர் கண்டித்தும் எழுதினார்கள். தற்பொழுது கல்வி இலாகா டைரக்டராகவிருக்கும் ஸ்ரீ. சீ. வீ. சந்திரசேகரன் M. A. (Oxon). F. R. Hist. S. (Lond.) “ஆண்டி”யைப் போன்ற நாடகாசிரியர்களே இந்தியாவுக்குத் தேவையென்று உபந்யாசம் செய்ததுடன், இந்த நாடகத்திற்கு ஒரு நூன்முகமும் எழுதியுள்ளார். அதற்குப்பின்பு இந்த நாடகம் பலதடவை அங்கும், மற்ற ஊர்களிலும், கல்கத்தாவிலும் நடிக்கப் பட்டாய் விட்டது.

“பாரத குமாரி” என்ற நாடகத்தில் சாரதா என்ற சென்னையிலுள்ள ஒரு பெண்டாக்டர் பாரிஸ்டரான தனது கணவனுடைய வீட்டுக்கு ருதுசாந்திக்கென்று போகிறாள். அன்றுகாலையில் தற்செயலாகக்கிடைத்த ஒரு ஆஸ்பத்திரி ரிக்கார்டு. மூலம் அவனுக்குப்பிரமேக நோயிருப்பதாக அறிகிறாள். உடனே சாந்திக்கல்யாணத்தை மறுத்துவிட்டுச் சென்னைக்குத் திரும்புகிறாள். அங்கு தன்னுடைய பந்துவான “பிச்சை” என்ற வாலிபன் கமலா என்ற விதவையை மணக்கவென்று அவளுடன் வந்து சேருகிறான். சாரதாவின் சேதியைக்கேட்ட அந்தவிதவை மிகுந்த த்யாகபுத்தியுடன், தன்னை மணக்கவந்திருக்கும் பிச்சையைக் கொண்டே சாரதாவை விவாஹம் செய்துகொண்டு இந்து சட்டத்தை மீறி, கிளர்ச்சியொன்றை உண்டாக்கும்படி ஏவுகிறாள். அதினாலேற்படக்கூடிய பொதுஜன உணர்ச்சியை உத்தேசித்து அவர்களும் சட்டத்தை மீறி மறுமணம் செய்கிறார்கள். பாரிஸ்டரான சாரதாவின் கணவன் சென்னைக்கு வந்து அவர்கள்பேரில் இரு கணவக் குற்றம் சாற்றிப் பிராசிக்யூட் செய்ய முயலுகிறான். அதுவரையிலும் திரை மறைவிலிருந்த கமலா முன்வந்து அவனைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று சாரதாவையும் பிச்சையையும் சட்டப்படியுள்ள தம்பதிகளாக்குகிறாள். அதிகாரிகள் கமலாவைக் கைது செய்கிறார்கள்.

* * *

“ஆண்டி”யின் இருபது நாடகங்களையும் விமரிசனம் செய்ய ‘ஸ்த்ரீ தர்ம’ இடங்கொடுக்காது. அவருடைய மனோதர்மம், பலதுறைகளிலுமுள்ள ஞானம், அனுபவம், பகுத்தறிவு, தைரியம், கலையின்மீதிருக்கும் தளராத ஊக்கம், களங்கமற்ற சுபாவ குணம் இவைகளை உணர்ந்த திருவாங்கூர் கலாபிமானிகள் இவரைக் கொண்டே 1927-ல் “கலோத்ஸவம்” ஒன்றை ஸ்தாபிக்கச் செய்து அதை இன்னும் அவ்வூர் மகாராஜாவின் போஷணையில் நடத்தி வருவது ஆச்சரியமன்று. காமப்பிரகடனங்களை அறவே அகற்றி ஸ்த்ரீகளின் உரிமைகளை எடுத்து விளக்குவதற்குக் கௌரவ குடும்பத்திற் பிறந்த ஸ்த்ரீகளே முன் வந்து ஸ்த்ரீ பாத்திரங்களாக நடிக்க வேண்டுமென்ற உயரிய கொள்கையையுமுடைய “ஆண்டி”யுடைய நாடகாபிநயக் கிரமங்கள் நமது சமுதாயத்தில் ஒரு மிகப் பெரியகிளர்ச்சியை உண்டாக்குமென்று நான் உறுதியாகக்கூறுவேன். அத்துடன் பெண்கள் இயக்கமும் பல மடையும் என்பதும் நிச்சயம்.

THE WOMEN'S PROTECTION LEAGUE,

3/29, Iswaradas Lala St., Triplicane, MADRAS.

R. RANGANAYAKI,
Hony. Organising Secretary.

OBJECTS

1. To advise and arrange respectable homes for women who are stranded either through poverty or through desertion or by death of their husbands or parents.

2. To render legal and financial aid to deserving women who are so stranded and have to launch litigations for securing their just rights.

3. To render medical, natal, and sanitary advice and aid to all women by deputing propogandists from house to house.

4. To organise an educative campaign and propoganda through conferences, lectures, dramas and demonstrations for securing the legitimate social, marital and inheritance rights of women.

5. To supplement and strengthen the activities of the **Auvvai Home, Mylapore, The Seva Sadan, Nungumbakam, The Vigilance Association's Rescue Home, Kilpauk, Sri Sarada Home, Mylapore,** and such **other** permanent **Homes** for Women by canvassing more liberal public support for them.

MEMBERSHIP

Membership of the League is open to all adult women, ir-respective of caste or creed, who endorse the above objects and pay an annual subscription of not less than Rupee One.

மாத்ரு சாபம்

ஓர் இந்து சமுதாய சீர்திருத்த நாடகம்
(மூன்று அங்கங்கள் அடங்கியது)

நாடகாசிரியர்

ஸ்ரீ "ஆண்டி"

[" மங்கல்யம் ", " பாரதகுமாரி ", " விதவையின் விடுதலை ",
" அன்னையின் அழைப்பு ", " அபவாதமாமா ?" முதலிய
பல நாடகங்களின் ஆசிரியர்.]

(All Rights Reserved).

Re. 1

பதிப்பாளர்:

ஆர். ரங்கநாயகி,

ஸ்த்ரீ ஸம்ரக்ஷண ஸபா,
3/29, ஈசுவரதாஸ் லாலா தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

I

பால கர்ப்பம்

[வக்கீல் நடேசய்யருடைய வீட்டு மாடியில் ஓர் அறை. மாலை ஐந்து மணியாயிற்று.]

[கையில் தனது தொழிலுக்குரிய சட்டையுடன் நடேசய்யர் பிரவேசம். அவருக்கு சுமார் 26 வயது மதிக்கலாம். தலைப்பாகையையும் சட்டையையும் ஸ்டான்டில் மாட்டிவிட்டு, ஒரு நாற்காலியில் உட்கார்ந்து சூளமடித்துக்கொண்டே பூட்ஸுகளைக் கழற்றி யெறிகிறார்.]

நடே:—அப்பாட! [என்று சாய்ந்து பொடி டப்பியையும் கைக்குட்டையையும் எடுக்கிறார்]. ஷ்.. ஷ்....ஷ்....ஷ்....[என்று சூளத்திலேயே ஒரு ராகத்தை ஆலாபனம் செய்துவிட்டுப், பொடியை மூக்கில் உறிஞ்சுகிறார்.]—அப்ப!—அப்பா!—[என்று இரண்டுதடவை தும்பிவிட்டு] அம்மாடி!—அம்மா! அந்தக் காப்பியெ இங்கெதானே கொண்டுவந்துடு.—[சற்று நடமாடி] அம்மா, காப்பியை இங்கயே கொண்டு வந்துடு!—[சூளமடிக்கிறார்]. அம்மா!—என்ன செய்றாளங்கே? இந்த அஞ்சுமணிக் காப்பியெப் பழக்கினது கஷ்டமா வந்து சேந்துது. அஞ்சு நிமிஷம் டிலேயாப் போனா தலைவலி—[கைக் கடிகாரத்தை நோக்கி] டையர்மீ! டென் பாஸ்ட் பைவ்? யாரங்கே?—இதொன்னு இந்தப் பொடியொன்னு.—இதென்ன?—அம்மா!

குப்புப்பாட்டி:—என்னடா என்னா? [என்று கையில் வெள்ளிக் கூஜாவுடன் பிரவேசிக்கிறாள். சுமார் 40 வயது மதிக்கலாம். அமங்கலியானாலும் அழுக்கில்லாத தூய வெள்ளைச் சேலை கட்டியிருக்கிறாள்]. என்ன அவியமுடா! குதிக்கிறையே கடந்து! ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப்பொறுக்கலியோ? காலிலெ கஞ்சியெக் கவுத்திண்டாப்பிலெ கத்தறையே! எல்லாத்திலையும் ஒங்கப்பாவெப் போல கொணமா? மலையாளத்து வித்தோன்னோ—அவரை போட்டாத் தொவரை மொளைக்குமா?

நடே:—போரும் உன் லெக்ச்சர்!—எனக்குத் தலைவலி பேத்துண்டுபோரது. காப்பியெ இப்பிடிக் குடுத்தூட்டு எங்கப்பாவெப்பத்திப் பேசிண்டிரு. [காப்பியை வாங்கி மேஜைமேல் வைத்து ஆற்றுகிறான்].

குப்பு:—[மேஜைமீது தன்னிரு கைமுட்டிகளையும் நாட்டி, இடது கையால் தன் நாடியைத் தாங்கிக்கொண்டு], அசலாத்துச் சுப்பக்கா கூப்பிட்டா மத்தியானம்.... ராமஸர்மா பண்றாளோன்னோ? போயிருப்போமே இன்னூட்டுப் போனேன். அவக்கா பேரனுக்குப் போன மாசங் கல்யாணமான விமர்சையெல்லாஞ் சொல்லிண்ட்ருந்தா. [பாதி பேசும்பொழுதே வாயைப்பிளந்து கொட்டாவிவிட்டு, வாயருகில் மூன்று சுடக்குப் போட்டுக்கொண்டு]. ராம ராம ராம ராம!!!

நடே :—[காப்பியை சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுதே சிரித்து] நல்ல ராமஸ்மரணே! சிரிப்பில் காப்பி மூக்கிலேறப் பாத்துது. ராமனே ஸ்மரிச்சவுடன் தானே கொட்டாவி அம்பாள் ஒனக்குப் பிரத்யக்ஷமாயுடருளே!

குப்பு :—ஒங்கப்பாச் சொன்னுப்லெ சொல்றயே அப்பா! அவுருமிப்பிடித் தான்! சிரிக்கச் சிரிக்க வார்த்தை சொல்லுவர்.—ஆனு மூக்குக்கு மேலெ நிக்கும் மின் கோவமும், ஒன்னுட்டுமா.—நீ என்னவோணுமோ சொல்லிக்கொ, ராசா,—பொண்ணுப் பொறந்தா சுப்புவோடக்கா பாறதிப்போலெ பொறக்கணும்.

நடே :—[காப்பியை சாப்பிட்டுக்கொண்டே] ஏனே?

குப்பு :—ஏனு? மாராசனெப் பெத்த மாலக்ஷிமி அவள்! அவளெப் பாத்தாலும் பசி தீருமே!—அடியம்மா! என்ன நகை, என்ன வெள்ளிப் பாத்றம், என்ன வெங்கலப் பாத்றம், என்ன சீர், என்ன கொண்டாட்டம்! அவ சொன்னு, சொன்னு, சொன்னு—நேக்குப் பாதிகூடச் சொல்லத் தெரீலெப்போ!—அவ்வள வடுக்கினு. இன்னம் ஆருமாசந் தீவாளியொடெ தங்கப் பஞ்சாத்ர உத்திரிணியும் குடுக்கறேஞ் சொல்லீர்க்களாம். புள்ளேயாத்துவா போடவேண்டிய நகெ கூட அவாளே போட்டுக்ரும் இன்னுட்டாளாம்.—இத்தனேக்கும் அந்தப் புள்ளெ மட்டிக்கலசங்கூடக் குடுக்கலெ! சொத்தும் அப்பிடியொன்னுஞ் சிந்தாடலெ!—சொன்னேனே, ராச்சியம் பொகமற ராசாட்டி அவள்! பொண்ணுப் பொறந்தா அவளெப்போலெ பொறக்கணும்.—என்னெப்போலியா? ஊர்லெ ஒருமொழம் ஓசத்தியான புள்ளேயேம் பெத்துட்டு, தரேலெ ஒருமொழம் தாழ்த்தியாருக்கேனே!

நடே :—ஒனக்கென்ன தாழ்த்தி இப்பொ?

குப்பு :—தாழ்த்தியே இல்லியே! ஒங்க வேட்டாத்லேர்ந்து வண்டி வண்டியா வந்தெறங்க்றதெ, வெக்க எடமில்லெப்பார்!—என்ன தாழ்த்தியா? ஊர் நடப்பு நோக்கென்ன தெரியுமுடா? மஞ்சப் பருப்பில்லே, மாப்ளச் சாதமில்லே! ஆடியில்லே, ஆருமாசமில்லே! தீவாளி யில்லே, திருக் கார்த்தி யில்லே! அஞ்சு லக்ஷணத்திலெ ஒரு லக்ஷணமுண்டோ? மண்ணுங்கட்டி மாப்ளேக்கி புண்ணுக்குக் கட்டிப் பலகாரம்னுதானே வெச்சிருக்கா?—சேதுட்டாளாம்!—இப்பிடி அவா எளப்பப்படுத்றத்துக்கு ஒங்கப்பாவாவது செத்துப் பொழச்சுண்டாரேப்பா!—

நடே :—அப்பாவுக்கென்ன இதிலெ? வார்த்தைக்கொருதடவை அவரை யிழுக்கறே?

குப்பு :—ஒன்னேட தொரக்ஷிக்கே தரேஞ்சொன்ன வெள்ளிப் பாத்ரமெல்லாம் இன்னஞ் சேயலேயெடா—சிமந்தமாய் ஒரு மாசமாச்சே! சஷ்டி மூர்த்தியோட சேயப்போருளோ?

நடே :—கையிலெ பணமிராது.

குப்பு :—ஆ, இராது! இராது!—சொல்லமாட்டாளா!—வேணுமானு ப்லாக்காய் வேரிலேங் காய்க்கும்!—போஷ்டாப்பீஸிலேர்ந்து மாஸா மாஸம் நாப்பது ரூவாய் சம்பளங் கட்டிக்கட்டி வாங்கருனே! பொண்ணுக்குச் சேயறதுக்கென்ன கொள்ளே?—கையெக் கடிக்கறது.

நடே :—எம் மாமனர் ஒரு வில்லேஜ் போஸ்ட் மாஸ்டர்—இன்னும் நாலு பொங்களேப் பெத்த எழையல்லவா அவர்?

குப்பு :—பாரேங் அவனெ! கோழ மனசான்னு இருக்கு!—அழுத் புள்ளெ தாம் பால்குடிக்குமுடா, ராசா. சும்மாருந்தாக் கோவியெச் சாத்திடுவாளே ப்பா!—நாஞ் சொல்றுப்பிலெ கேளு, ராசா :—தொக முழுக்க வந்தாலொழிய பொண்ணெப் பொறந்தாத்துக்கு அனுப்பமுடியாதுன்னு எழிதிடு! காவிலெ வந்து விழுந்து ஒன்னு கொறையில்லாமெச்சேதுடுவா. சடையெப்பிடிச்சாப் பண்டாரங் கிட்டெ வருவனே!

நடே :—ஏர்க்கனவே நானவளெ அனுப்பப்போரதில்லியே.—வைத்திய வசதி இங்கெதானேருக்கு. அதிலேம் மொதலாவது கர்ப்பமிது.

குப்பு :—எந்தச் சாக்கு வோணுமோ சொல்லிக்கோ நீ! மீதியெல்லாம் நாம் பாத்துக்கறேன்.

[வெளியிலிருந்து)— சாமி!—சாமி!—

நடே :—யாரது?

ஒரு தந்திக்காரன் :—[பிரவேசித்து] ஒரு தந்தி, சாமி. [தந்தியைக் கொடுக்கிறுன்.]

குப்பு :—[பரபரப்புடன்] தந்தியா!—எங்கிருந்துடா?—அடே, ராசா, வாங்கிப் பார்! ஆருக்கென்னவோவே!

நடே :—[தந்தியை உடைத்துப் பார்க்கிறுன்].

குப்பு :—எங்கக்கா விச்சாருக்காளோ தெரீலியே! அவ மாப்ளெக்கிப் பல்வலியாருந்துதாம்; என்ன சேதுதோ? ஏது சேதுதோ? [அழுதுகொண்டு] அம்மா, அழகே சொரீ! நோக்கு வெள்ளிக்கழமை நீராஞ்சனம் ஏத்தி வெக்கறேம்மா! எல்லாரும் விச்சாருக்கட்டும்!—அப்பா, ராசா, க்ஷேமம் போட்டிருக்கோடா அதிலெ?

நடே :—[மந்தஹாசத்துடன்] ஒன்னுமில்லெ; சுப ஸமாசாரந்தான். என்ன பயமொனக்கு!—எம் மச்சினி ராஜம் ருதுவானுளாம் இன்னிக்கிக் கார்த்தாலெ. எங் காயிதப்படிக்குள்ள வெள்ளிப் பாத்ரங்கள்ல்லாம் தயாராயிருக்காம். சுந்தரியெக் கூட்டிண்டுபோக நாளெக்கி அவ தம்பி ராமு வருணும்.

குப்பு :—அம்மாடி! பொழச்சேன்! ஒரு தத்து நீங்கித்து!—பாக்குக்கடிக்கற நேரத்துக்குள்ளாப் பதறடிச்சுடுத்தே என்னெ?—ஓங்க மாமனுருக்குத்தான் தந்திலெ மஞ்சளெத்தடவி அனுப்பப்டாதோ. பிசிநாறிலேம் பிசிநாறி, கடைபறக்கிப் பிசிநாறி! என்ன கலக்கங் கலக்கிடுத்து!

நடே :—சரி, இனிமே ஒனக்குக் கொண்டாட்டந்தான்!

குப்பு :—போட்டும் போ! இன்னிக்கு என்ன நக்ஷத்ரம்? ஸாதி, சாகம், அனுஷமோ?—அனுஷத்தெ பூக்கற பொண் அருந்ததிம்பா. பூமிக்குப் புண்யவதியும் பாருக்குப் பாக்கியவாட்டியுமா இருக்கட்டும்!—சுப சீக்ரம் இன்னுட்டு, தாச்சியமில்லாத வேளெயெப்பாத்து ஓம் பொண்டாட்டியெ அனுப்பிச்சுடப்பா நாளெக்கி.

நடே :—ஏன்?

குப்பு :—சேது வெச்சிர்க்கர்த்தெக் கையோட வாங்கிக்கத்தானே வோணுமுடா. ஆறினகஞ்சி பழங்கஞ்சிதானே !—நாளை நீட்டினா நமக்குத்தானே நஷ்டமுங்கூட ?

நடே :—பைத்யமே!—அந்த ஊர்லெ வைத்தியவசதியில்லை இன்னாக்கா என்னல்லாமோ ஔர்றே? ஏற்கனவே அவுளுக்கு வயசாகலெ. வைத்தியவசதிக்குறவினாலெ ஏதாவது வந்துட்டா, பால்ய விவாஹத்தாலெதான் வந்துதூன்னு என் சிநேகிதாள்ளாம் பழிக்கவா ?

குப்பு :—வயசாகலியா ! ஆகாமலா புள்ளையுண்டாயிருக்கா ?

நடே :—கர்ப்பமானா வயசாயுடுமா ?

குப்பு :—அதுக்கு பன்ரெண்டு வயசாயாச்சேடா! இன்னம் ரண்டுகூடப் போனா பதினாறாயுடுமே!—நேக்குப் பதிமூனாலெதானே நீ பொறந்தே. ஓங்கப்பாக்கூட இப்பிடி ஒன்னுஞ் சொல்லலியே!

நடே :—அப்பா சாப்ட்டார்!

குப்பு :—அப்பிடிச் சொல்லாதே, ராசா. பொண்ணெப் பொறந்தாத்துக்கனுப் பாட்டா வீண் பொல்லாப்பு—ஊருக்குங் கேலி!

நடே :—ஓஹோ! கொஞ்சமின்னாலெ அவளை அனுப்பவாண்டாம்ன்னு நீயே சொன்னியே ?

குப்பு :—அதுக்கெல்லாம் காரணமிருந்துதே !

நடே :—ஓங் காரணத்தைக் கொண்டு அடுப்பிலெவை !

குப்பு :—அப்பா, ராசா !—ஓங்க வேட்டாத்துக்காறா பத்து பன்னெண்டு பெத்துப் பழகினவா—அனுபவஸ்தா. இதுவோ மொழத்துக்கொரு பாம்பும் சாணுக்கொரு பேயுமாக் கூத்தாடற ஊர். நெறமாசச் சூலியெ இங்கெ வெச்சுக்கப்படுமோ ?—நேக்கோ வயசாச்சு—கண்ணுந் தெரியலெ; காதுங்கேக்கலெ. இது தெரியலியே நோக்கு!

நடே :—என்ன செய்யச் சொல்றாயதுக்கு ?

குப்பு :—நாந்தாஞ் சொன்னேனே, நாளைக்கே பொண்ணைக் கூட்டி யனுப்பிச் சுடணும்னுட்டு.—அவா சரக்கு அவாளண்டே!

நடே :—அவா சரக்கா இது ?

குப்பு :—தலச்சம் பொறக்கரவரைக்கும் அவாசரக்குத்தானேடா.

நடே :—எல்லாம் உன்னிஷ்டப்படித்தான்.

குப்பு :—என்னிஷ்டப்படியா ஓன்னிஷ்டப்படியா ?

நடே :—பிறவி முதல் பிரயாணம் வரையும் பொம்மனாட்டி படிவாதந் தானே !

குப்பு :—பாத்தியா ? இப்பிடித்தான் ஓங்கப்பாவுஞ் சொல்லுவர் !—ராசா! நோக்கொரு கொழந்தை பொறந்து பாக்கணும்னுட்டு எம்புட்டு நாளா அழகே சொரி கோவிலுக்கு நடக்கறேன் அப்பா ! [கண்ணீருடன்] ஓங்கப்பாவுஞ் செத்து,

நானு மிப்பிடியானதுக்கு, பேரனை மடியிலெ வெச்சுண்டு பாத்துட்டு, அங்யாஸ் மரணங் கெடச்சாத்தான் என் நெஞ்சு வேகும்!

நடே:—அப்பாவெப் பத்தின பேச்செ விட்டுடாதே!

குப்பு:—இவனேதுக்கு நிக்கருன்—இந்தத் தந்திக்காரன்?

நடே:—துட்டுக்கு.

குப்பு:—மொதலுக்கே முட்டியடிக்கறது, அனுமந்தராயருக்கு தெப்பத்திருளாம். அலையருன் ஆத்தமாட்டாமல்! ஒங்க மாமனருட்டெப் போய் வாங்கிக்கச் சொல்லு—மஞ்சத் தடவாமக் கொண்டுவந்துட்டு!—இல்லாட்டா அந்தத் தந்தியெத் திருப்பிக் குடுத்துடு!—[வெளியே போகிருள்].

நடே:—[தன் சட்டை ஜேப்பிலிருந்து இரண்டணு எடுத்துத் தந்திக்காரனுக்குக் கொடுத்து அவனே அனுப்புகிருன். பின்பு சாய்வு நாற்காலி மேலுட்கார்ந்து தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, மறுபடியும் பொடிபோட்டுக்கொண்டு சூளமடிக்கிருன்].

[பஞ்சாங்கத்துடன் கிட்டு ஜோஸ்யரும் அவர் பின்னல் குப்புப் பாட்டியும் பிரவேசிக்கிருர்கள்].

நடே:—வாரும், கிட்டு ஜோஸ்யரே!

கிட்டு:—என்ன, வக்கில்வாள்!—மச்சினி ருது சோபனம் போல்ருக்கே?—உம்—சிலாக்கியமான தினம்—ஆமாம்!—சிலாக்கியமான தினமிது! ஸோமவாரம் எப்பவுமே அநுகூலந்தான். ஆத்துக்காரியை ச்வச்ருக்ருஹத்துக்கு அனுப்ப ஒரு சுபலக்நம் இப்பவே பாத்துடணம் சொன்ன அம்மா! [நாற்காலியில் உட்காருகிருர்].

நடே:—ஆமாம், நாளேக்கி ஒரு லக்நங் குறிப்பிடுங்கோ.

குப்பு:—செட்டனப் பாத்துச் சொல்லப்பா, கிட்டு. காரியந் தலக்கிமேலெ கடக்கு நேக்கு! [பக்கத்து அறையிலிருந்து சுந்தரி உற்றுப் பார்த்துவிட்டு மறைகிருள். நடேசன் மாத்திரம் அவளேப் பார்க்கிருன்].

கிட்டு:—ஒக்காந்துக்ரது தானே, அம்மா! நிக்றேளே—அந்த நாக்காலிலியே ஒக்காந்துக்கலாமே?

நடே:—ஜோஸ்யர்வாள்! எல்லாருமே கீழெ கூடத்துக்குப் போய்டுவோமே? இந்தப் படுக்கையறைக்குள்ளிருந்து ரகசியம் பேசுவானேன்?—வாரும்! [எழுந்திருக்கிருன்].

கிட்டு:—அப்டியே செய்தூட்றது. [எல்லோரும் போகிருர்கள்.]

[அவர்கள் சென்றதும் பக்கத்து அறைக்குள்ளிருந்து விரைந்து சுந்தரி பிரவேசித்து மேஜைமேலிருந்த தந்தியை எடுத்து வாசித்துப் பார்க்கிருள். அவளுக்கு சுமார் பதிமூன்று வயது மதிக்கலாம். கர்ப்பிணியாகையால் வளேகாப்புகள் கையிலும் காலிலும் அணிந்திருக்கிருள். புது ஆடைதரித்துத் தலேமயிரைப்பின்னிப் பூச்சூட்டியிருக்கிருள்.]

குப்பு :—[மறுபடியும் பிரவேசித்து] வேஷ்! வேஷ்! அழகாருக்கு! இங்கியா வந்து காத்திருக்கா தேவிடியா மினுக்கும் மினுக்குண்டு?—ஒகோ! தெரிஞ்சுதே யிப்போ! ஊருக்குப் போறதுக்குமிந்தி ஆம்ட்யானண்டெ கோள் சொல்லணுமோ? ஒன்னுந் தெரியாதாங் கன்னி ஆறுமாசத்து ஜன்னி! இதுக்கா இங்கெயிங்கெ அடிக் கடி ஓடி ஓடி வரு? இம்மட்டுக்குள்ளெ இத்தனே வித்தையா! தம்பிடிக்குக் கல்யாண மாம் அதுலெ கொஞ்சம் வாணவேடிக்கையாம் இங்க்ருப்பிருக்கு!

சுந்தரி :—நான் யாருக்கும் காத்திருக்கல்லெ. டாக்டராத்து லக்ஷ்மி ஒரு மீற் றிங்குக்கு அழைச்சா—போகப் போறேன்.

குப்பு :—மீன் திங்கவா?—நீயா?

சுந்தரி :—இல்லெ. கர்ப்பிணிகளே அழைச்சு ஒரு சபை கூட்டப்போருளாம். அதிலெ "கர்ப்பமும் பிரசவமும்" இங்க்றதைப் பத்தி டாக்டர் உபந்யாசம் செய்யப்போருராம்.

குப்பு :—சவைக்கா? நன்னருக்குத்தாம்போ! பொண்ணுப் பொறந்தவா சவைக்குப் போவாளோ? தேவிடியாளா?

சுந்தரி :—ஒங்க புள்ளெதாம் போச்சொன்னுர்.

குப்பு :—புள்ளே அறத்தான்! தாச்சுத் தவிச்சு வறத்தகாணும் மொளச்சாப்லெ குடும்பத்துக்கேதோ பெரீவா புண்யத்திலே ஒரு வித்து விழுந்திருக்கு. அவ னென்னத்தெக் கண்டான்? எட்டுமாசக் கர்ப்பிணியெச் சவைக்கனுப்பி ஊரா கண் படவா!—சூலிக்கும் பாலிக்கும் எங்கேன்னுருக்குமே பேயும் பிசாசும். அதி லேன் நடுச்சந்திவேளே, சந்திக்காக்கா பறக்கறபோதா? நன்னச் சொன்னுய்!— போ உள்ளெ!

சுந்தரி :—பிரசவத்தைப்பத்தி அறியறதெப்பிடி?

குப்பு :—நாங்கள்ல்லாம் சவைக்குப் போய்த்தான் புள்ளேப்பொறக் சத்துண் டோமோ?

சுந்தரி :—பிரசவத்திலெ நேரக்கூடின அபாயங்களேப் பத்தி டாக்டருக்குத் தானே தெரியும்?

குப்பு :—நேக்குந் தெரியும். நூறு பிரசவம் பாத்திருக்கேன் நான்;—ஒங்கம்மா வெப்போலெ பன்னி குட்டி போடருப்லெ பத்துப்பன்னெண்டு போடாட்டாலும் சிமையெ வெல்லவெச்ச சிங்கக்குட்டியெத்தான் பெத்திருக்கேன்!

சுந்தரி :—ஒங்களுக்குத் தெரிஞ்சா எனக்கென்னுச்சு?

குப்பு :—என்னடீ, நீ வந்தென்னெக் கங்காணிக்கிறியோ? வரத்துக்கு மிந்தி என்ன அதிகாரம் பாத்தியா இதுக்கு! மொளேச்சு மூனு சண்டக்காயாகலெ,— என்னே யுன்ன ஏவரது!—நானுமொரு பொண் பொறந்து கூனனுக்கு மாலேயிட்டு கூனனுமென்னெக் கொரங்காட்டலாட்ருண்டீ இங்க்ருப்லெ இர்க்கு!

சுந்தரி :—[பதிலளிக்க முடியாமல் கையிலிருந்த தந்தியைப் பார்க்கிருள்].

குப்பு :—ஆத்துக்காரியங்களேக் கலங்களேன் அந்தந்த வாக்கிலே போட்டுட்டு, இங்கெவந்து நிக்கறியே; இருட்டியாச்சே; வட்டி வட்டியா வாரருண வக்கீல்லெ

ஓம்புருஷன் புழுக்கச்சி ஆக்கர்த்துக்கு? பிச்சை யெடுத்துதாம் பெருமாள் அத்தெக் கொண்டுபோச்சாம் அனுமார் இங்க்ருப்பலெ வந்து மூண்டுட்டியேம்மா! முழிக்கற முழியெப்பார், ரண்டாட்லெ ஒராடாட்டுமா!—கைய்யிலெ என்னுதா?—ஓகோ! பேப்பர் வாசிக்றையோ? வேஷ்! வேஷ்! அது ஒன்னுதாங்கொறை! நானுமிருக்கேனே கண்ணெம் மூடிக்குண்டு!

சுந்தரி :—[தந்தியை மெஜைமீது வைத்துவிட்டுப் புறப்படுகிறாள்].

குப்பு :—போரும், போரும் நீ காரியஞ்சேதது! நீ சேயாமத்தாங்கொறையாக் கடந்துது! நானே எல்லாத்தியும் சேது கொளுத்தி வெச்சிர்க்கேன். காரியஞ் சேயறத்துக்கூன்னுதானே எஞ்செம்மத்தெப் படச்சிர்க்கு—அந்தக்கடனெத் தொலெக்காட்டா விடுமா?

சுந்தரி :—[கண்ணீர் விடுகிறாள்].

குப்பு :—நானென்ன சேதுட்டேண்டீ ஒன்னெ இப்பிடி நீ அழறத்துக்கு?—பாரேன் அதை! அடிச்சாப்லென்ன அழறது! என்ன ஜாலம், என்ன மாமால முடீ இந்தக்காலத்து பொங்களுக்கு!—ஆ! ஆ!—இதேதுடீ சனியன்!

நடே :—[பிரவேசிக்கிறான்].

குப்பு :—அப்பா, நடேசா, ஓம் பொண்டாட்டிபாடு, ஓம்பாடு! நாம் போறேனிதோ; எஞ் செலவுக்குப் போட்டுடப்பா. நானிருவத்தஞ்சு வர்ஷம் மாசாந்தம் நடந்து ஒன்னெப் பெத்ததுக்கு, இந்தப்பிடி அகமானப்படவேண்டியதுதான்!—பெத்தவயத்லே பெரண்டையத்தான் வெச்சுக் கட்டிக்கணும்! [கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்].

நடே :—என்ன! என்ன நடந்துது? ரண்டுபேருமாக் கண்ணீர்விடறேளே?

குப்பு :—என்ன நடந்துதா?—ஆத்துக் காரியங்களேங் கலங்களேன் அந்தந்த வாக்லெ போட்டுட்டு, இங்கெவந்து பேப்பர் பாத்துண்டு நின்னா. "அடியம்மா, ஏண்டீ இப்பிடி நிக்கறே? இருட்டியாச்சே" இன்னேன். அதுக்குள்ளா நீ வந்துட்டே. கண்ணீர் வடிச்சுண்டு நிக்ரு அதோ—கள்ளக் கண்ணீர் கண்ணுக்கு சொகமோன்னோ? நீலிக்கிக் கண்ணீரும் நெத்தியிலெதானே!

நடே :—இவ்வளவு தானா!—சின்னக் கொழந்தெதானே அவள்; விவரம் தெரியலாச்சா? அவளுடைய வயசிலெ நான் ஒன்னெ என்னவெல்லாம் சொல்லிவைதிருக்கேன்?

குப்பு :—ஆமாம், என்னெ மாத்ரமா வைவாய் நீ? ஓங்கப்பாவெயும் என்னெல்லாஞ் சொல்லுவாய்! அவரானதுனலெ பொறுத்துண்ட்ருந்தார். அவரெப்போலெ நானும் பொறுக்கமாட்டேனு சொல்லலெயப்பா.—ஆனா இந்த வயசிலியே இந்த ஓரம் ஆகாதிவுளுக்கு! வரத்துக்கு மிந்தி என்னெயுன்னா அதைச்சேய் இதைச்சேய் இன்னு கங்காணம் பண்ரது?—அதுக்கு.மீன் திங்கப்போணுமாம்!—அவம்மாவெப்போலெ ஊர்சித்தற வெறும்மா.. இவள்?

நடே :—அசட்டுப்புத்தி. தாய்க்கேத்தபொண்ணு!

குப்பு :—நன்னாச் சொன்னாய் ராசா!—ஆனா அவம்மாவைப்போலெ போயுடப்டாது இதுவும்!—கெட்டார் வாழ்ந்தா கெளம்பறதாமரை, வாழ்ந்தார் கெட்டா வரையோட்டுக் கொதவுமோ?

நடே:—அம்மா, நீ கொஞ்சம் வெளியே போயிரு.—அவம்மாவெப்போலெ போயுடுமோ பாக்கறேன் நானு!

குப்பு:—வீண் பொல்லாப்பு வருத்திப்புடாதேப்பா.—நெறமாசச்சூலியெ நான டிக்கச் சொன்னேஞ் சொல்லுவா.

நடே:—ஒன்னும் வராது, போ!

குப்பு:—மதுரெப் பொங்கள் மலையையும் உருக்கிப்புடுவா இம்பா. கதவெச் சாத்திக்கோ!—அது அழுறசத்தம் அல்லசனுக்கு கேக்காதிக்கு.

நடே:—சரி!

குப்பு:—நாஞ் சுப்பக்காளாத்துக்கே போயுட்றேனப்பா. [போகிருள்].

நடே:—[கதவைத் தாளிட்டு ஒரு நாற்காலியிலுட்கார்ந்து] சுந்தரீ, இப்டிவா! [பொடி போட்டுக்கொண்டு] சுந்தரீ!—

சுந்தரீ:—[அழுது கொண்டே நிற்கிருள்].

நடே:—சுந்தரீ! எதுக்குடீ இந்தழுகை? உன்னையாரு என்ன சேதுட்டா இப்பொ? இந்தா, இப்டிவா.—உம்?—ஏனின்னும் யோசிக்கிறே? சுந்தரீ!—என்ன, நாங் கூப்டரது கேக்கலியா என்ன?

சுந்தரீ:—[நடேசனருகில் வந்து நிற்கிருள்].

நடே:—என்னடீயிது? நீ பைத்யக்காரி போல்ருக்கே! சுத்த அசட்டுப் பெண்ணையா கல்யாணம் பண்ணேன் நானு? பைத்யமே! நீ யேங் காரியம் செய் யல்லேன்னு நானு என்னிக்காவது உன்னண்டே கேட்டதுண்டா? வேலக்காரி ஓர்த் தியெ ஆக்குட்டாப்போச்சு. இதுக்காகச் சண்டே போட்டுக்குவாளோ?—ஏஞ் சும்மா நிக்கிறே?—ஏதேன் என்னண்டெ சொல்லணுமா? அத்தெச் சொல்லு— தைரியமாச் சொல்லலாம் என்னண்டே.—உம்?

சுந்தரீ:—எனக்கு—

நடே:—என்ன ஒனக்கு?

சுந்தரீ:—ஊருக்குப் போகணும்.

நடே:—சரி, அனுப்பிடறேன். இன்னும் என்னவோணும்?

சுந்தரீ:—இன்னுமென்ன! எங்கேம் விழுந்து சாகணும்—அவ்வளவுதான்!— ஒங்குளுக்கென்ன? செத்தாப்போச்சு குளிருங்காச்சனும், பத்தோடு போச்சு அழு கையுந் துக்கமும்!

நடே:—ஏனிப்படிப் பேத்தறேடீ?

சுந்தரீ:—அருணோதயம் முதலா அந்திப்பொழுதுவரேலியும் இதுதானு? வச வுக்குத்தான் ஒரோய்வில்லியா? ஒங்கம்மாவுக்குக் காரியம் சேயக் கைவணங்குமோ? வம்பும் வாய்வீச்சும் வளந்துண்டேவாது.—மாசம் ஒம்பதாறதே எனக்கு—இது வரேலியும் ஏன் என்னை ஊருக்கனுப்பச் சொல்லல்லே? என்னிடுப்பும் தொடை

யும் அசந்துபோரது எனக்கல்லவா தெரியும். என்னையும் எங்கம்மா பொறலேப்போலிருக்கு ? குத்தங்கொறை கூறர்த்துக்கு மாத்ரம் எங்கிருந்தோ வந்து குதிச்சுட்ரு! [அழுதுகொண்டே] 'அகங்கண்டது பொறம் சொல்லேல்' இன்னு ஒன்னையும் ஒத்தர்ட்டியும் சொல்லவும் கூடாது !

நடே :—என்ன நடந்துது ?

சுந்த :—டாக்டராத்து "இந்திய மாதர் சங்க" மீற்றிங்குக்குப்போக இந்த வழியே வந்தேன். நீங்களெல்லாருமா இங்கெ பேசிக்கொண்ட்ருந்தேள்.

நடே :—ஆமாம். நானும் ஒன்னைப் பார்துட்டுத்தானே அவாளை அழைச்சுண்டு கீழெபோனேன். இந்தத் தந்தியையும் நீ பாக்கணும்ன்னுட்டு மேஜெ மேலெ வச்சுட்டுப்போனேன்.

சுந்தரீ :—போனேளல்லவா? அதை நானெடுத்துப் படிச்சு முடிக்கிறதுக்குள்ளா மாமியார் வந்து பேப்பர் வாசிக்கிறியா சிறிக்கீன்னு அதட்டி வைசுட்டா.

நடே :—கல்வியில்லாத கெழம் அது. கொஞ்சமாவது படிச்சவளா ஒன்னெப்போலெ ?—சுந்தரீ, எல்லா வீடுகளிலேயும் இப்பிடித்தானிருக்கு. இந்தக் கெழச்செனிகள் வாயில் வந்ததை ஒளறிடும். ஆனு மனசுக்குள்ளெ ஒன்னு மிராது.

சுந்தரி—இராது, இராது !—அதுதான் அடிக்கச் சொன்னுளோ அல்லசனுக்குத் தெரியாதிக்கி ?

நடே :—அவளென்ன சொன்னுலும் நீ இன்னிக்கிருந்ததுபோலெ மௌனமாயிருந்துடேன். அவ முன்னக்கெ நானு ஒன்னெ என்ன வைதாலும் உண்மையின்னு மாத்ரம் நம்பாதே ! உம் ?—சுந்தரீ !

சுந்தரி :—என்ன ?

நடே :—நீ நாளைக்கு ஊருக்குப் போனுக்கெ எப்பொத்திரும்பி வருவெ ?

சுந்தரி :—பிரசவிச்சு அஞ்சுமாசமானப்பொ.

நடே :—இன்னும் ஆறு மாசகாலம் நாம் பிரிஞ்சிருக்கணுமே !—சரிதான் ! [இன்னுமொருதடவை பொடி போட்டுக் கொள்ளுகிருன்].

சுந்தரி :—நேக்கு இன்னெரு காரியம் வோணும்.

நடே :—தர்றேன். அப்பிடியாவது வாய்திறந்து கேளு.

சுந்தரி :—அந்தப் பொடி டப்பி வோணும்.

நடே :—இவ்வளவுதானு ! இந்தா, இதோ—இதிலுள்ள பொடியெ மாத்ரம்—

சுந்தரி :—அப்டியே தாருங்கோ.

நடே :—சரி ! [டப்பியைக் கொடுக்கிருன்].

சுந்தரி :—[அதை வாங்கிப் பொடியைத் தரையிலிறைக்கிருள்]. தொலேயட்டும் சனி ! என்ன ஆபாஸம் !

நடே :—ஐயையோ !—த்ஸ¬, த்ஸ¬, த்ஸ¬, த்ஸ¬ ! ஒன்னே—

சுந்தரி :—இதுதான்—முறிச்சுடுங்கோ இந்தக்கையை !

நடே :—அதுவே எல்லுந்தோலுமா முறிஞ்சுபூட்டாப்பலெதானே யிருக்கு !—என் கையெப் பாரிதோ.

சுந்தரி :—அது ஒலக்கை. பேனு பிடிச்செழுதப்பேரொலக்கையும், அம்மி அரைக்க அருவமக் கையும்னு தானே நம்மடவா நியாயம் !

நடே :—பலே ! சரக்கிருக்கே !

சுந்தரி :—ஒங்கம்மா சகவாசமல்லவா !

நடேச :—ஏன் நிக்கறே ? இப்பிடி வந்திரேன் ! அம்மா இல்லெ—சும்மா வந்துக்காரு ! [என்று சாய்வு நாற்காலி கையின்மேல் உட்கார அழைக்கிருன்].

சுந்தரி :—அந்த மூக்கை மாத்துட்டு, பொடிவாடயே யில்லாமெ வேறு மூக்கு வெச்சுண்டு வந்தாத்தான் இன்னமே ஒக்கார்ரது !

குப்பு :—[வெளியேயிருந்து கதவைத் தட்டி] ராசா !—ராசா !—கதவெத்தற !

நடேச :—[எழுந்து] இதோ வந்துட்டேன் ! என்ன அசந்தர்ப்பத்திலெ வந்து தட்ரது சனி ! [போகிருன்].

சுந்தரி :—[தன் ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு அகலே சென்று நிற்கிருள்].

நடேச :—[கதைவைத்திறந்து குப்புவை உள்ளேவிட்டு] நானு எவ்வளவோ நயந்து பேசிப் பாத்தேன். அடிச்சேன்—வைதேன் ! ஒன்னுக்கும் எளகவேயில்லெ. இனி இவளெ இங்கெ வெச்சுக்கவேபடாது. நாளைக்கி அவ தம்பி வரதாகத் தந்தி வந்திருக்குப் பாரு. அவனேடெ கூட்டி அனுப்பிச்சுட்டுப் பேசாமலிருந்துடுவோம் !

குப்பு :—பாத்தியா ? நான் அப்பவே சொன்னேனே. தொடப்பக்கட்டைக்கிப் பட்டுக்குஞ்சம் கட்டிப் பார்ப்பாளோ ? வாயாடின்னு அது. தேமேந்து அனுப்பிச்சுடு நாளைக்கே சனியெ!—கீழெ போவோம் வா. நேரமாச்சு!—அடியம்மா, பரதேவதே ! பத்ரகாளி ! எனிப்பிடி நெறத்தி வெச்சிருக்கிங்கே ? மிந்திநட !

நடேச :—நீ மிந்திநட, அம்மா. அவள் எனக்குப் பின்னுலெ வரட்டும் !

குப்பு :—ஆஹு, நாம் மிந்திப்போறேன்.—மோத்தைப்பார், மோத்தை ! மரத் தட்டாட்டுமா ! சனி ! [போகிருள்].

நடேச :—[சுந்தரியிடம் ஜாடை செய்துவிட்டுப் பின்னுல் போகிருன்].

சுந்தரி :—[புன்னகையுடன் போகிருள்].

அபிநவ

குமார சம்பவம்

[வக்கீல் நடேசய்யருடைய வீட்டில் ஓர் அறை. அயல் வீட்டு சீனுத்தாத்தா நின்று இருமிக்கொண்டிருக்கிறார். குப்புப்பாட்டி சீனுத்தாத்தாவின் மனைவியான சுப்புப்பாட்டி யுடன் விரைந்து உள்ளே போகிறாள்.]

குப்பு :—[அறைக்குள்ளிருந்து] சுந்தரீ ! சுந்தரீ ! என்னாகேள்டீ !—அடியம்மா, சுந்தரீ ! என்னெச் சந்திலெ நெர்த்தூட்டுப் போகாதே ! [பரபரப்புடன் வெளியே ஓடிவந்து] இதென்ன புதுமையுடீ ? எல்லாரும் புள்ளெயுண்டாவா பார்திருக்கேன். இப்பிடிக் கையெக் காலெப்போட்டு ஒதச்சுண்டு பேபிடிச்சாடுமோ ?—நன்னார்க்குத்தாம்போ ! எந்தலேலெழுத்து ! கார்த்தாலெத்தொட்டு இப்பிடிக்கட்டையாப் போட்டிருக்கே ! நானென்ன சேயப்போகிறேன் ? எனக்குத் தெரிஞ்ச பிரஸாதமும் வீவுதியும் எம் புட்டொ போட்டுப்பாத்தேனே இத்தெனை நாழியா. பொறந்தாத்துக்குப் பொறப் பட்ர போதுன்னா புடிச்சுட்டுது !

சீனுத்தாத்தா :—ஸீமந்தமான அடியோடே அந்தப் பொண்ணெப் பொறந் தாத்துக்கனுப்பிக்கரதுக் கென்ன நீ ?

குப்பு :—இன்னீ ராத்திரி ரயில்லெ அதுந் தம்பியோடெ அனுப்பணும்னார்ந் தேனே ! ஜோஸ்யங் கிட்டுவும் அதுக்குத்தானே லக்னம் பாத்துச்சொன்னான்.

சீனு :—நடேசனெங்கே ?

குப்பு :—ரூவாயெ வாரியெறச்சு டாக்கட்டருக்குன்னா பீஸு கொட்டப் போயி ருக்காம்போலிருக்கு.—சுப்பக்கா, அதும் பக்கத்லேர்ந்து பாத்துக்கொ செத்தெ. எங்கையுங்காணும் பதர்ரது அது படரதெப்பாத்தா.

[சுந்தரியின் தம்பி ராமுவை அழைத்துக்கொண்டு வக்கீல்உடைதரித்த யாழ்ப்பாணம் கதிர் காம நாவலர் பி.எ.பி.எல்., பிரவேசிக்கிறார். ராமுவுடைய கையில் ஒருசிறு சூட்கேஸ் இருக்கிறது]

நாவலர் :—[சீனுத்தாத்தாவைப் பார்த்துக் கைகூப்பி] ஐயனே, சிறியேன் பணி கின்றேன் !

சீனு :—யாரது, நடேசனா ? [என்று நாவலர் அருகில் வந்து உற்றுப்பார்க்கிறார்.]

நாவலர் :—அன்று ; யாழ்ப்பாணம் கதிர்காமன்.

சீனு :—ஓஹோ ! வக்கீல் நாவலரவாளா ?—ஏது இப்பிடி ?

நாவலர் :—புகைவண்டி நிலையத்திலிருந்து இவ்வில்லமேக வழியறியாமற் றத் தளித்தான் இவ்விளைஞன்—நண்பர் நடேசய்யர் மைத்துனன். அவனை ஈண்டழைத்து வந்தேன்.

சீனு :—ராமுவா ?

ராமு :—உம்.

நாவலர் :—ஐயரவர்களிலையோ ?

குப்பு :—அத்தெயேங்கேக்கறேள், யாவாணத்துப்புள்ளே ? இன்னிக்காத்தாலெத் தொட்டுப் பேபிடிச்சிருக்கு இவக்காளுக்கு. கட்டையாப் போட்டிருக்கு மந்த்ரவாதி யெக்கூப்பிட்டி ஏதேஞ் சேயச் சொல்லாமெ டாக்டர் வீட்டிக்கு ஓடீர்க்கான்:—உள்ளெ போய்ப்பாருடா ஒங்கக்காளெ ! [சூட்கேஸை எறந்துவிட்டு ராமு உள்ளே ஓடுகிறான்.]

நாவலர் :—தன்னுணர்வு சற்றேனு மிலையோ அத்தையலுக்கு ?

குப்பு :—ஒணர்வாவது கிணர்வாவது ! அப்பிடியும் இப்பிடியும் போட்டு ஆட்டிக்கொல்லரது. கண் நெலக் கெட்டிப் போச்சே ! நிமிட்டுக்கொருதரம் நடுக்கித்தூக்கி வாரிப்போட்ரதுன்னா !

ராமு :—[உள்ளிருந்து] அக்கா, அக்கா !—அக்கா !—அக்கா !

குப்பு :—[உள்ளே ஓடிப்போகிறாள்.]

நாவலர் :—வனிதைக் கென்ன வயதாயிற்றோ ?

சீனு :—பன்ரெண்டு பதிமூணிர்க்கும்.

நாவலர் :—கருவுற்றிருப்பதாகச் சொன்னானே பாலகன் ?

சீனு :—ஆமாம் எட்டு ஒன்பது மாஸமிருக்கும்,

நாவலர் :—புதுசேரியில் நடை பெற்ற நறுமணமோ ?

சீனு :—இல்லெ, மலையாளத்லெ—பொம்மனாட்டி ஸமஸ்தானத்லெ நடந்து பாழுஞ் சாரதாச்சட்டத்துக்கு பயந்து.

குப்பு :—[பிரவேசித்து] ஊருக்குத்தெரியாமக் காரியத்தெப்பார்க்காமல் டாக்டரெவர்த்தி அல்லசலெக் கௌப்புவாளோ ? தலேலெழ்த்து ! எம்மானம் போறது ! சுப்பக்கா, அதும்பக்கத்லேர்ந்து பாத்துக்கொ செத்தெ—அதுங்கையெப் பிடிச்சுக்கோடா, ராமு !—சீனு அத்திம்பேர், நீருமிங்கிர்ந்து போயுடாதீங்கோ. நாம் போயந்த மந்த்ரவாதி கிட்டுவெ இன்னொர்க்கக்கூட்டிண்டு வறேன்.

நாவலர் :—பேயோ பிரசவ நோவேயிது ?

குப்பு :—நோவே ? எட்டாமாசத்திலியா ? நன்னார்க்குத்தாம்போ !—எப்பொப் பிடிச்ச பேயோ யிது ? தொட்டுலெ ஒட்டின பேய் ஜெம்மத்லேம் போகாதாம்பா ! [வெளியே போகிறாள்].

சீனு :—[நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மறுபடியும் இருமுகிறார்].

நாவலர் :—இளமையில் மணப்பதைப்பற்றி வழக்கறிஞர் குழாத்தில் வைத்து நடேசய்யருடன் யான் வாது தொடர்ந்ததுண்டு. "இளமையிற் கல்" என்றாளௌவையார். "இளமையிற் கொள்" என்பேன் யான். திருநாவுக்கரசு நாயனார் மரபிற் பிறந்த என்னினத்தார் முதுமையிற் கொள்வதால் நேரும் தீமையை, நாங்களே நன்குணர்வோம். அஃதுபற்றியே யென்போன்ற சமுதாயத் தொண்டர்கள் ஆற்றலுடன் அந்தணரைப் பின்பற்ற முயலுகின்றோம்.

சீனு :—நீங்களப்பிடி முன்னுக்கு வறயள். எங்க பசங்கள்ளாம் இப்பிடி பின்னுக்குப்போறா !

 3868

நாவலர் :—ஆம். ஆனல் சாரதாச் சட்டத்தை ஆதரித்துச் சொற்பொழிவு செய்த நடேசய்யருடைய மனைவிக்கு வயது பனிரண்டு; அதர்க்குள் கர்ப்பமும்கூடவா?—நன்று, நன்று!

[டாக்டர் குலாம் ஹைதர் எம்.பி.பி.எஸ்., அவர்களையும் ஒரு மருத்துவச்சியையும் அழைத்துக்கொண்டு நடேசன் அதி விரைவாகப் பிரவேசிக்கிறுன்]

நடே. :—அம்மா!—அம்மா!—டாக்டர் வந்திருக்காரே! அம்மா எங்கே?

டாக்டர் :—டாம் யோரம்மா ஸார்! பேஷ்யண்ட் எங்கே?

நடே :—அந்த உள்ளெ ஜன்னிவந்து வலிச்சுண்டு கடந்தா. அம்மாவெப் பக்கத்லெ இருக்கச் சொல்லீர்ந்தேன்.

டாக்டர் :—[உள்ளே செல்கிறுன்].

[மருத்துவச்சி டாக்டருடைய தோல் பையை அவிழ்க்கிறுள்]

குப்பு :—[பிரவேசித்து, மருத்துவச்சியைப் பார்க்கிறுள்] இதாரு திவளொர்த்தி? நீ யாருடி?—ஒ, மங்களாத்தெருச் சட்டக்காரிச்சின்னு!

நடே :—எங்கு போயிருந்தேடீ இவ்வளவு நேரம்? டாக்டர் வந்து வென்னீர் வேணும்னு கேக்கறுரே?

[பஞ்சாங்கம், பிரம்பு, திருநீறுப்பை முதலியவைகளுடன் கிட்டு ஜோஸ்யர் பிரவேசம்]

குப்பு :—டாக்கட்ரா? ஒ, கூட்டிண்டு வந்துட்டியாப்பா? கொழந்தயெ வெட்டி வெட்டி யெடுத்துடுவனே பாவி! நாம் மந்த்ரவாதீட்டை வீவுதி போட்ரத் துக்குள்ளா என்ன அவச்ரம்டா நோக்கு? மலையாளத்து மந்த்ரவாதத்தெவிடவா மண்ணுங்கட்டி மருந்து சாதிச்சுடப்போறது?

நடே :—பைத்யமே! ஓம் மந்த்ரவாதமும் நீயும்!—ஜோஸ்யரே, ஒமக்கும் மூளெ கொதிக்கிறதோ?—ஸமயாஸமயமில்லியா மந்த்ர வாதத்துக்கும்?

கிட்டு :—நல்லவேளையுன்னுயிது. குஜ சந்த்ரயோகமாச்சே!

டாக்டர் :—[வெளியே வந்து] லேபர் எப்பொத் தொடங்கினுன் பாய்?

நடே :—நேத்து ராத்திரி.

டாக்டர் :—ஏம் மிட்வைப் கூப்டலே?

நடே :—எங்கம்மாக்கே எல்லாந் தெரியும்ன்னு. அத்தோடு லேபராக்கும்ங்க்ரதே எனக்குத் தெரியாதே இதுவரேலியும். பேய் பிசாசுன்னல்லவா சொல்லுட்டா.

டாக்டர் :—நாண்சென்ஸ்! வுன்கி அம்மா எங்கே?

நடேச :—இவள்தான்.

டார்க்டர் :—ஒ, திஸ் க்ரோ—? ஏ, கெள்வீ அம்மா! இப்டிவா!—ஷிரோத்யங் கள்ஞ்சி என்னு நேரமாச்சி?

குப்பு :—செரோதயமா! அதேதிப்பொ எட்டாமாசத்லெ?

டாக்டர் :—எட்டாம் மாசம்கி ஷொல்ரான்?—அப்ஸெர்ட்! பத் மாஸம்கி மேலே ஆய்ட்டானே, பீபீ!

குப்பு :—இவன் என்னத்தெக் கண்டான்?—பொய் கோவுன்னு இது. பேயும் படுத்ராது. இப்பிடி அவசரப்படுத்தித்தானே ஆயுதம் போட்டு அந்த ஆண்டியாத்துக் கொழந்தையெக் கொன்னுன். பிராமணக் கொழந்தையளெக் கொல்லான்னு சத்துருவாப் பொறப்பட்ருக்கானெ வெள்ளக்காரன்.

டாக்டர் :—ஸ்டுப்பிட்! [உள்ளே போகிருன். அவன் பின்னே மருத்துவச்சியும் போகிருள்.]

குப்பு :—டாக்கடர் என்ன துப்பிட்டுப் போருனே உள்ளே? நேக்கொன்னுந் தெரீலியே?

நடேச :—தெரியவே வாணும்! [ஒரு நாற்காலியில் சாய்ந்துகொண்டு தலையிற் கைவைத்துத் துக்கப்படுகிருன்.]

கிட்டு:—கொஞ்சம் மனவருத்தப் பட்ராப்லெருக்கு—பால்யமொன்னெ?

குப்பு :—செட்டன வீவுதியெப் போடப்பா, கிட்டு.

நாவலர் —இறைவன் திருநீறும் ஒரு நன்மருந்தேயாம்.

கிட்டு :—தாத்தா, நேத்து ராத்ரியே இந்த துர்ப்பாதை வந்தாச்சே—ஒடனே எனக்கு சொல்லியனுப்பப்டாதோ?—இப்பொவந்து சேந்திருக்கா! [தன் திருநீறுப் பையையும் பிரம்பையும் எடுத்து ஒரு பலகைமீது வைக்கிருர். அதன் அருகில் தாம்பூலம், தேங்காய், பழம், ஒரு ரூபாய், இவ்வளவையும் வைக்கிருள் குப்புப்பாட்டி.]

குப்பு :—[கைகூப்பி நின்று] அடியம்மா, மேலாங்கோட்டா! பெரியபாளையத்தா! அக்க! தங்கையளா! இந்தப் பொண்ணுடைப்பாவெக்கொண்டு ஓனக்கொராடுங் கோழியும் வெட்டச்சொல்லி இடுப்புங் கொழந்தையுமா உருவமடிச்சுவைக்கச் சொல்ரேண்டியளா!—மங்கிலிப்பொண்டுகளா! ஒங்குளுக்கும் பட்டுப்போலெ பொடவையுமெடுத்து மங்கிலிப்பெண்டுகளிடச் சொல்ரேண்டியளா!—நான் அன்னிக்கே சொன்னேன். மலையாளத்தூர்லெ மழத்துக்கொரு பேயுண்டுன்னு. கேக்காமெ நாசமாப் போற சாரதாச் சட்டத்துக்குப் பயந்து அங்கெபோய்க் கல்யாணம் பண்ணித்து!

கிட்டு :—[ஜபம் முடிந்து எழுந்து விபூதியையும் பிரம்பையும் எடுத்துக்கொண்டு சுந்தரியுடைய அறையை நோக்கிச் சென்று] அபம்ருத்யுஹரதேவதா ஸ்ரீ பராசக்திப் பிரசாதேன ஆயுராரோக்யப்ராப்திரஸ்து!—இதென்ன கதவு தாப்பாட்ருக்கே?

குப்பு :—தாப்பாளும் போட்டுண்டுட்டாளு பாவி? இப்பிடித்தான் நாகத்தும் புள்ளெ ஆண்டியாத்லேஞ் சேதான்!—ஆயுதத்தேங்கொண்டு போனுளே அந்தச் சட்டக்காரி! என்ன சேயருனே, ஏது சேயருனேவே?—அப்பா, கிட்டு, பர்ச்சமாவது பாரப்பா!

நாவலர் :—[நடேசன் பின்னுல் உட்கார்ந்து பெருமூச்சுவிடுகிருர்.]

குப்பு :—திர்ஷ்டி தோஷ மாருக்குமோயிது?

கிட்டு :—என்?

குப்பு :—நேத்திக்கிச் சந்தியாலந் தலெயெவாரி மினுக்குண்டு, அத்தனும் நகையேம் மேலெ வாரி மாட்டிண்டு வாசல்லெ போய் நின்னு. எங்கண்ணேபட்டிருக்குமே!—

ராமு :—[அழுதுகொண்டு அறையைவிட்டு வெளியே வருகிருன். அறைக்கதவு மறுபடியும் தாளிடப்படுகிறது.]

குப்பு :—ஒன்னேம் வெளீலாக்கிட்டாளாப்பா? நீ வந்த நேரப்பலமது!

XXV A. 3

கிட்டு:—ஆரூடத்லெ ப்ரஸவிப்பள் னுட்டுத்தாங் காண்ரது, சந்தேஹமில்லை!

குப்பு:—இப்பிடிப் படுத்துவானேன்?

கிட்டு:—அங்காரகன் சேர்க்கை. ஆனா பயப்பட்றதுக்கில்லெ. குரு பலத்திருக்கான் சிம்மத்லெ. சீக்ரத்லெ ப்ரஸவமாயுடும்!

குப்பு:—குருவுன்னாப் புள்ளையும்பாளே—புள்ளெ தானா பொறக்கும்?

கிட்டு:—அதுவா? பார்ப்போம்—கொஞ்சம் பொறுங்கொ!—அவ்வளவு நிச்சயமாச் சொல்லமுடியாது—சந்த்ரனுங்கூட விருக்காம் பாருங்கொ. ஆனா ஒன்னு நிச்சயம். பொறக்கப்போரது கொழந்தைதான்! வாய்வாப்பூடாது!

குப்பு:—அது போருமப்பா நேக்கு! ஆணோ பொண்ணோ எதேன் ஆயுசோட பொறக்கணும். பொண்ணானாலும் போட்டுக்கடக்கா?—அப்பா, முருகேசா, புள்ளையாப்பொறந்தா அதுக்கு மூக்குங்குத்தி "ஆண்டீ"ன்னும் பேரிட்டு ஒஞ்சந்நிதானத்லெகொண்டு பிடிப்பணம் போடச் சொல்ரேண்டாப்பா!

[டாக்டர் ஹைதர் பிரவேசித்து வியர்வையைத் துடைத்துக்கொண்டு ஒரு நாற்காலியில் உட்காருகிறான்.

குப்பு:—[உள்ளே ஓடிப்போகிறாள்].

கிட்டு:—[டாக்டர் ஹைதரிடம்] ஆண் பிரஜைதானே?

டாக்டர்:—[தன் கைக்குட்டையால் விசிறிக்கொண்டு தலையை அசைக்கிறான்.]

ராமு:—[விரைந்து அறைக்குள் ஓடிப்போகிறான்].

[நாவலரும், நடேசனும் நிமிர்ந்து ஆவலுடன் டாக்டர் முகத்தைப் பார்க்கிறார்கள். சீனுத்தாத்தா இருமுகிறார்].

கிட்டு:—ஆண் பிரஜைதானே—பாத்தீளா? அப்பிடித்தாங்கண்டுது. ஜோஸ்யந்தப்புமோ? எப்பிடியேன் ரண்டும் ரண்டு பாத்ரமாயுடுத்தல்லவா? அதுதாம் பெரியவாளநுக்ரஹம்!—ஆண் சிசு, அதிலேம் மூல நக்ஷத்ரஜாதம்!—எல்லாம் மனப்பேய்தான் இன்னு சொன்னேனல்லவோ?—இன்னிக்கிப் போட்டும், நாளெ ராத்திரி ஒரு தீபபூஜை நடத்திப்புட்றேன் நான்—போருமது!—வக்கீல்வாள், பயப்படவாண்டாம்!

டாக்டர்:—ஷட்டப், பூர்!—டாக்கிங் ரூட்!

நாவலர்:—சோதிடரே, தங்கள் திருவாயைச் சற்றுத் திறவாதிருப்பீராம்!

குப்பு:—[அறைக்குள்ளிருந்து] அடியம்மா, சுந்தரீ!—சுந்தரீ! இதென்னகதியுடீ நோக்கு?

ராமு:—[வெளியே வந்து] அத்திம்பேர், ஓடி வாரும்! அக்காளுக்கென்னவோ சேயரது!

நடேச:—[விரைந்து உள்ளே ஓடுகிறான்.]

[நாவ்லரும், சீனுத்தாத்தாவும், கிட்டுஜோஸ்யரும் திடுக்கிட்டு விழிக்கின்றனர்.]

குப்பு:—[அறைக்குள்ளிருந்து துக்கமடைந்த குரலில்] அடி, கடங்காறீ! நீயென்னையே மாத்தினேயோ? நீ இருந்தும் எரிஞ்சுபோயும் பொகஞ்சையோ? எச்சுந் தெனவும் எளப்பமும் வெச்சையோ? எஞ்சதிருக்குடும்பத்தெச் சந்திலெபோட்டியோ? என் வலதிக்குடும்பத்தெ வாசல்லெபோட்டியோ?—அடியம்மா, அடியம்மா! [என்று தலையில் அடித்துக்கொள்ளும் சப்தம் கேட்கிறது.]

நாவலர் :—டாக்டரவர்களே, நீவிரும் சென்று நோக்காததேன் ?

டாக்டர் :—வுண்ணம் பத் மின்ட்லெ பூடுவா பாய், அந்தப் பொண்ணு !

ராமு :—[அழுதுகொண்டு] சுந்தரி செத்துப் போப்போருளா ?

டாக்டர் :—நம்பொ நல்லாப் பாத்தானப்பா. பச்செக்கொள்ந்தேக் கட்டி ஒடம்ப்லெ ரெத்த மில்லாமெப் பூட்டுது. நம்பொ ஆய்தங்கிய்தம் போட்டுக் கொண்ணுட்லெ.

ராமு :—[அழுதுகொண்டு உள்ளே மறுபடியும் ஓடுகிருன்.]

குப்பு :—[அலங்கோலத்துடன் அலறிக்கொண்டு வெளியேவந்து தரையில் விழுந்து புரண்டழுது] தெரியுமே நேக்கு—அந்தக் கடங்காறி யென்னெ யிப்பிடிச் சந்திலே நெர்த்தூட்டுப் போய்டுவள் இன்னுட்டு ! அப்பவே ஜோஸ்யஞ் சொன்னுனெ, செவ்வாதோஷ மிருக்கூன்னு—அதுபோலெ பலிச்சுதே ! எம் புள்ளேயேஞ் சந்திலெநெர்த்தீ, என்னேம் பழியேக்க வெச்சாளே மாபாவி ! சண்டாளி ! கடங்காரி ! என் வாசல்லியா வந்து தொலேயணும் ? நானு பழியேத்தேன் ? நாளேக்கி ஊருக்குஞ் சொலவாச்சே ! நாம் பண்ணின பாவமா ?—ஐயோ !

நடேச :—[வெளியேவந்து] இந்தச் சண்டாளி வார்த்தையெக் கேட்டு மதிகெட்டேனே பாவி !—ஐயோ !

குப்பு :—நன்னுருக்குதாம்பொ ! நானென்ன சேதேன் ? செத்துப்போறவாளெப் புடிச்சு நெர்த்தமுடியுமோ ? இந்தப் பழியுங்கூடவா ? [உரத்த குரலில் அழுகிருள்] பதப்பட்ட பச்சரிசி பல்லிடுக்கிலெ பூந்தாப்லெ மதப்பட்ட பொங்களுக்கு வாக்கெரையா வெச்சயேம்மா !

டாக்டர் :—நான்ஸென்ஸ் ! லுக் டு தி பேபீ ப்லீஸ் !

குப்பு :—போற போக்லெ, தெலேயோமத் தேந்தலேலெ கட்டிட்டுப் போனுளே !

நடேச :—[அழுதுகொண்டு] அந்தக் கொழந்தை யாருட்ருக்கு டீ ?

குப்பு :—[எழுந்து] அதெல்லாஞ் சரியாருக்குடாப்பா. சுப்பாக்காள்ட்டிருக்கு. அத்தையாவது விட்டுட்டுப் போனுளே மாராசி—சூட்டுக்கோலுக்கொ ராத்துக்கோல் ! மலேயெ உருட்டின மாதேவனுயிர்க்கட்டுமது !

நடேச :—போரும் ஒன்னுடை வசனமெல்லாம் ! என் வயிறு பத்தி யெரியரது அதெக் கேட்டு !—தொலேயுள்ளெ !

குப்பு :—என்னம்மாடீ ! அடிபாவி ! [உள்ளே போகிருள்].

டாக்டர் :—பாய், உன்கி கொள்ந்தேக்கி வெட் நர்ஸ் ஆக்கி மொல்பால் குட்க்கருன். கொள்ந்தே பத்ரம் !—உன்கி வொய்ப் போன்த்தே என்கி ரொம்ப வர்த்தம்கி இர்க்ருன் பாய் !—குட் நைட் ! [போகிருன்].

நடேச :—[விம்மியழுது தன்னிரு கைகளாலும் கண்ணே மூடிக்கொண்டு] சுந்தரீ !—சுந்தரீ ! ஐயோ ! [என்று அறைக்குள் மறுபடியும் போகிருன்].

[சீனுத்தாத்தா, நாவலர் இருவரும் அறைக்குள் உற்றுப் பார்க்கிருர்கள். கிட்டு ஜோஸ்யர் தன்னேக்கவனிப்பார் யாருமில்லாதபடியால், நாற்புறங்களிலும் சுற்றிப்பார்த்துவிட்டுத் தேங்காயையும தாம்பூலத்தையும் தக்ஷிணேயையும் எடுத்துத் தன் உத்தரீயத்திற் கட்டிமுடிந்துகொண்டு சந்தடி செய்யாமல் நழுவுகிருன்.]

III

தாயா, பேயா?

